<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>
<u>அ.வ.எண்.938/2023</u>

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் நாள் புதன்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | தொழில் |
| த/பெ | ராமசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

<u>**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**</u>

<u>**2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. வாதி செல்வகுமார் கடந்த 20 வருடங்களாக கோயம்புத்தூரில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். 30.10.2013 ஆம் தேதியில் வாதியின் தகப்பனார் சுவாமிநாதன் மோகன் என்பவருக்கு வீட்டுமனை இடத்தை கிரையம் கொடுத்தது தொடர்பாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்று சொன்னால் தெரியாது. 1-ம் பிரதிவாதிக்கு உயில்படி பாத்தியப்பட்ட சொத்தை தான் இரண்டாம் பிரதிவாதிக்கு கிரயம் பெற்றுள்ளார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 2025 ஆம் வருடம் மேற்படி சாமிநாதன் ஒரு மாதம் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அவருக்கு வயிற்று வலி காரணமாக மேற்படி சிகிச்சை வழங்கப்பட்டதாக ஆவணம் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல அவருக்கு தலையில் இருந்த கட்டிக்கு சிகிச்சை வழங்குவதற்காக மருத்துவமனையில் இருந்தார். வா.சா.ஆ.15 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களுக்கு எதிராகவும் செல்வக்குமாருக்கு ஆதரவாகவும் தவறான சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி மேற்படி சொத்தை சரியான தொகை செலுத்தி சட்டபடியாக கிரயம் பெற்றுள்ளதால் மேற்படி கிரயம் செல்லும் என்று சொன்னால் சரியல்ல.

செல்வகுமார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உயில் எழுதப்பட்ட நேரத்திலும் கிரயம் எழுதப்பட்ட நேரத்திலும் நான் மும்பையில் கந்துக்கடையில் வேலை செய்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.12 18:09:07 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.